# ஸ்ரீவன துர்க்கையம்மன் பாடல்கள்

சென்னைப் பல்கலைக் கழகம்
சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயத்திற்காக
அளிக்கப்பெறும் பதிப்பேடு.

பதிப்பு:
**அ. கார்வண்ணன்**

நெறியாளர்:
முனைவர் **வீ. அரசு,**
பேராசிரியர் & துறைத்தலைவர்
தமிழிலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்,
மெரினா வளாகம், சென்னை - 600 005.

**தமிழிலக்கியத்துறை**
**சென்னைப் பல்கலைக் கழகம்**
சென்னை - 600 005.
மே 2003 - 2004.

# ஸ்ரீவன துர்க்கையம்மன் பாடல்கள்

சென்னைப் பல்கலைக் கழகம்

சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயத்திற்காக

அளிக்கப்பெறும் பதிப்பேடு.

பதிப்பு:

**அ. கார்வண்ணன்**

நெறியாளர்:

முனைவர் **வீ. அரசு,**

பேராசிரியர் & துறைத்தலைவர்

தமிழிலக்கியத்துறை,

சென்னைப் பல்கலைக் கழகம்,

மெரினா வளாகம், சென்னை - 600 005.

**தமிழிலக்கியத்துறை**

**சென்னைப் பல்கலைக் கழகம்**

சென்னை - 600 005.

மே 2003 - 2004.

சுவடியியல் மற்றும் பதிப்பியல்
பட்டயப் பதிப்பிற்காக
அளிக்கப்பட்ட பதிப்பு
வரிசை எண். 13

முனைவர் **வீ. அரசு,**
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,
தமிழிலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்,
மெரினா வளாகம்,
சென்னை - 600 005.

# நெறியாளர் சான்றிதழ்

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழிலக்கியத் துறையின் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயத்திற்காக **செல்வன் அ. கார்வண்ணன்** அவர்கள் **ஸ்ரீவன துர்க்கையம்மன் பாடல்கள்** என்னும் பொருண்மையில் அமைந்த தாள் சுவடியை எனது மேற்பார்வையில் பதிப்பு செய்தார் என்றும் இப் பதிப்பு இவரது சொந்த முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

இடம் : சென்னை
நாள் :

(வீ. அரசு)
நெறியாளர்

**அ. கார்வண்ணன்**
முதுகலை
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை - 600 005.

# பதிப்பு மாணவர் உறுதிமொழி

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழிலக்கியத் துறை யின் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயத்திற் காக **செல்வன் அ. கார்வண்ணன்** ஆகிய நான் **ஸ்ரீவன துர்க்கையம்மன் பாடல்கள்** என்னும் பொருண்மையில் அமைந்த தாள் சுவடியை **பேராசிரியர் வீ. அரசு** ஐயா அவர்களின் மேற்பார்வையில் ப திப்பு செய்துள்ளேன் என்றும் இப்பதிப்பு என் சுய முயற்சியால் விளைந்தது என்றும் உறுதியளிக்கிறேன்.

இடம் : சென்னை
நாள் :

**(அ. கார்வண்ணன்)**
பதிப்பு மாணவர்

# நன்றியுரை

சுவடியில் மற்றும் பதிப்பியல் பட்டயக் கல்வி சென்னைப் பல்கலைக் கழகத்தில் அமைய முதன்மை யாயாய் அமைந்த **பேராசிரியர் வீ. அரசு** அவர்களுக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுவடியியல் துறையில் புதுமை செய்த சென்னைப் பல்கலைக் கழகத் திற்கு முதற்கண் நன்றி.

சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயக் கல்விக்கான பாடங்களைச் சிறப்பாக நடத்தி ஐயங் களை நீக்கிய தமிழிலக்கியத்துறை விரிவுரையாளர் **முனைவர் ய. மணிகண்டன் ஐயா** அவர்களுக்கும் **முனைவர் கி. ஜெயக்குமார்** அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஸ்ரீவனதுர்க்கைஅம்மன் பாடல்கள்** என்னும் பொருண்மை அமைந்த இத்தாள் சுவடியை படியெடுக்க உதவிய **ஜெ.கருணாகரன்** அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பதிப்புப் பணியில் உதவி செய்த நண்பர்களுக்கும் ஒளி அச்சு செய்து கொடுத்த **அன்றில்** பதிப்பகத் தாருக்கும் என் நன்றி.

**அ. கார்வண்ணன்**

## பதிப்புரை

தெய்வங்களுக்கு சடங்குகள் நிகழ்த்தி வளமை கண்ட தமிழ்ச் சமூகத்தில் நம்பிக்கையின் அடிப்படை யில் வழிபடும் சிறு தெய்வங்கள் முதன்மை பெறு கின்றன.

தமிழக நாட்டுப் புறங்களில் மாரியம்மன், காளியம்மன்போன்ற பெண் தெய்வங்கள் சக்தியின் மறு உருவமாகக் கருதுவது தமிழகக் கிராமப் புற மக்களின் நம்பிக்கையாக இன்றும் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. அத்தகைய பெண் தெய்வங்களில் ஸ்ரீவன துர்க்கை அம்மன் என்னும் பெண் தெய்வம்பற்றி விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், தேவதானம் பேட்டை கிராமத்தைச் சேர்ந்த **A. ஜெயராம்** அவர்கள் பாடியருளிய புகழ்ப் பாடல்களும்போற்றிப் பாடல்களும் அமைந்ததே **"ஸ்ரீவனதுர்க்கை அம்மன் பாடல்கள்"** என்னும் இத்தாள் சுவடிப் பதிப்பாகும்.

### நூல் பொருண்மை

ஸ்ரீவன துர்க்கை அம்மன் பாடல்கள் என்னும் இத்தாள் சுவடி செஞ்சி வட்டம், தேவதானம்பேட்டை யில் உள்ள பேட்டையில் உள்ள பேட்டை மலை என்றழைக்கப் பெறும் கரியமாலையில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீவன துர்க்கை அம்மனின் அதிதீர

செயல்களையும், அம்மனின் அருள் திறங்களையும் புகழ்ப்பாடலாக கொண்டு அமைந்து காணப் பெறுகிறது.

## நூல் அமைப்பு :

ஸ்ரீவன துர்க்கைஅம்மன் பாடல்கள் என்னும் இத்தாள் சுவடியில் அமைந்த பாடல்கள் 40 ஆகும். இந்நூல் முதலில் விநாயகர்துதி, சரஸ்வதி துதி என்னும் இருதுதி பாடல்களையும் அவையடக்கப்பாடல் ஒன்றையும் கொண்டு தொடங்கி அம்மனின் புகழ்பாடல்கள் தொடர்ச்சியாக அமைந்து முற்று பெறுகிறது.

## இசைப்பாடல்கள் :

கும்மி இன்னிசை, தாலாட்டு, திரை இசைப்பாடல் மெட்டுப்பாட்டு போன்ற இசைப் பாடல்களைக் கொண்டு ஸ்ரீவன துர்க்கை அம்மன் பாடல்கள் என்னும் தாள் சுவடி காணப் பெறுகிறது. இசைப் பாடல்கள் ஆசிரியரின் இசையார்வத்தை மெய்ப்பிப்பதாக அமைந்துள்ளது.

## யாப்பு :

ஸ்ரீவன துர்க்கைஅம்மன் பாடல்கள் என்னும் இத்தாள் சுவடி இலக்கியத்தில் விருத்தம், செய்யுள், சந்தம்போன்ற யாப்பில் அமைந்த சந்தங்களைக் கொண்டு இயற்றப் பெற்றுள்ளன. இந்தப் பாடல்கள் ஆசிரியரின் சந்த முயற்சியையும் திருப்புகழ் ஈடுபாட்டையும் பறைசாற்றுகின்றன.

## நடை :

ஸ்ரீவன துர்க்கைஅம்மன் பாடல்கள் என்னும் இந்த இலக்கியம் இனிய எளிய தமிழ்ச் சொற்களாலும், பேச்சு வழக்குச் சொற்களாலும் அமைந்து உவமை, உருவகம், கற்பனை நிறைந்து பாமரரும் அறியும் வண்ணம் அமைந்து காணப் பெறுவது இதன் தனிச் சிறப்பாகும்.

வடமொழிச் சொற்கள் பாடலின் இடையே இடம் பெற்றிருப்பது கி.பி.20 ஆம் நூற்றாண்டிலும் வடமொழி யின் செல்வாக்கு இருந்து வருவதைக் காட்டுகிறது.

## பிழைகள் :

எழுத்துப்பிழைகள் அமைந்தும், லகர - ளகர, றகர - ரகர, வேறுபாடின்றியும் மெய் மயக்கம் அமைந்தும் ஸ்ரீவன துர்க்கைஅம்மன் பாடல்கள் என்னும் இத்தாள் சுவடி காணப் பெறுகிறது. மேற் காணப் பெற்ற பிழைகள் திருத்தம் செய்ய பெற்று இப்பதிப்பு அமைகிறது.

## நூலாசிரியர் :

"ஸ்ரீவன துர்க்கைஅம்மன் பாடல்கள்" என்னும் இத்தாள்சுவடியில் அமைந்த பாடல்களை அருளிய ஆசிரியர் A. ஜெயராம் என்பவராவார். இவர் விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டத்தைச் சேர்ந்த தேவதானம் பேட்டை என்னும் கிராமத்தைச் சார்ந்தவர். இவர் கி.பி.20 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து மறைந்தவர் என்பதும், இந்து சமயத்தைச் சார்ந்தவர் என்பதும், ஸ்ரீவன துர்க்கைஅம்மன் மீது மிகுந்த பக்தி கொண்டவர்

என்பதும் இத் தாள் சுவடி மூலம் பெறப்படும் கருத்தாகும்.

## கனவும் - புலமையும் :

இந்நூல் ஆசிரியர்அடிப்படைக் கல்வி பயிலாதவர் என்பதும், வனதுர்க்கை அம்மனை துன்மதி ஆண்டு சித்திரை மாதம் 8 ஆம் தேதி திங்கள் (20.04.1981) அன்று கனவில் கண்டு அம்மனின் அருளால் புலமை பெற்று சித்திரை மாதம் 10 ந்தேதி (22.04.1981) புதன் கிழமை அன்று அம்மன் வரலாற்றை துர்க்கை அம்மன் திருவிளையாடல் என்னும் நாடகமாக எழுதினார் என்பதும் ஸ்ரீவன துர்க்கைஅம்மன் பாடல்கள் என்னும் தாள் சுவடியில் காணப் பெறும் அகச் சான்றுகளாகும்.

## படைப்புகள் :

இந் நூலாசிரியர் ஸ்ரீவன துர்க்கைஅம்மன் வரலாற்றை புகழ் பாடல்களாகவும் போற்றிப் பாடல்களாகவும் அன்றி துர்க்கை அம்மன் திருவிளை யாடல் (அ) துருவ அரக்கன் சண்டை என்னும் நாடகமாகவும் இயற்றியுள்ளார். இதனைத் தொடர்ந்து கமலாவதியாள் கார்மேகன் மோச்சம் என்னும் சிவனேஸ்வரி திருக்கல்யாணம், நாரதர் கலகம் என்னும் சக்தி சதுரமுகாசூரன் சண்டை என்பன போன்ற பிற நாடகங்களையும் இயற்றியளித்துள்ளார் என்பதை நாடக நூல்கள் தற்போது கிடைக்கப் பெறாமை நமது தவக்குறையாகும். தாள் சுவடியில் வரும் குறிப்புகள் மெய்ப்பிக்கின்றன.

## பதிப்பும் தாள் சுவடியும் :

ஸ்ரீவன் துர்க்கைஅம்மன் பாடல்கள் என்னும் இத்தாள் சுவடி செஞ்சி வட்டம் தேவதானம்பேட்டை யைச் சார்ந்த ஆசிரியர் **A. ஜெயராம்** அவர்கள் எழுதிய கையெழுத்துப் பிரிதியான தாள் சுவடியை முதன்மை யாகக் கொண்டு பதிப்பிக்கப்பெறுகிறது. இத்தாள் சுவடியின் மூலம் ஆசிரியர் **A. ஜெயராம்** அவர்களின் மகனார் ஜெ. கருணாகரன் அவர்களிடம் தற்போது உள்ளது.

**அ. கார்வண்ணன்**

# ஸ்ரீவன துர்க்கைஅம்மன் வரலாறு

தேவதானம்பேட்டை மாரியம்மன் ஆலய அர்ச்சகர் தங்கவேல் ஆதியம்மாள் நீண்ட காலம் குழந்தை இல்லாத நிலையில் இவ்வூர் தருமராசன் குளக்கரையில் சக்தி குழந்தையாகத் தோன்றிட ஆதியம்மாள் குழந்தையைக் கண்டெடுத்து தேவி எனப் பெயர் வைத்து வளர்த்துவர சிலகாலங்கழித்து சிவன் சூழ்ச்சியால் ஆதியம்மாள் பழியால் தேவி கோபமுற்று தேவதானம்பேட்டை கரியமாமலையில் வனதுர்க்கை யாக அமர்ந்து அருளாட்சி செய்து வருகையில் தேவதானம்பேட்டையில் பிறந்த காரணத்தால் தாய் வீட்டுச் சீதனமாகப் பெண் ஆடு பலி தர வேண்டு மென்று பெரியோர்கள் கனவில் அம்மனைக் கேட்க அவ்வண்ணமே ஒவ்வொரு ஆண்டும் ஆடி மாதம் ஞாயிற்றுக்கிழமையில் பலி கொடுக்கப்பட்டுத் திருவிழா செய்யப்பெறுகிறது. சித்திரா பவுர்ணமி தோறும் ஸ்ரீவன துர்க்கைஅம்மனுக்குத் திருவிழா செய்து துர்க்கை அம்மன் திருவிளையாடல் என்னும் நாடகம் நடிக்கப்பெற்று வருகிறது.

## தேவதானம்பேட்டை - கரியமாமலை:

### புராணக் குறிப்புகள்:

கந்தபுராணக் கண்மூடிச் சருக்கத்தில் அருணை என்னும் திருவண்ணாமலைக்கு நேர் கிழக்கில் இரு காத வழி (20 மைல்)தொலைவில் அமைந்த கல்மலை கரியமாமலை என்றும் கரியமாமலையில் எழுந்தருளி யிருக்கும் தெய்வம் அம்மன் ஆதி துர்க்கை என்றும் குறிப்பு காணப்பெறுவதாக இத் தாள் சுவடி ஆசிரியர் ஜெயராமன் அவர்கள் குறிப்பிடுகிறார். கந்த புராணத்தில் குறிக்கப்பெறு வதாக கூறப்பெறும் கரியமாமலை தற்போது பேட்டை மலை என்றும் அங்கு அருள்புரிந்த ஆதி துர்க்கை ஸ்ரீவன துர்க்கைஅம்மன் என்றும் தேவதானம் பேட்டை மக்களால் வழங்கப்பெற்றுவருகிறது.

### கரியமாமலை சிறப்புகள்:

தேவதானம்பேட்டையில் பேட்டை மலை என்று அழைக்கப்பெறும் கரியமாமலை ஏழு மடிப்புகளைக் கொண்டு உயர்ந்து காணப்பெறுவது இதன் தனிச்சிறப்பு ஆகும். இதன் உச்சியில் ஸ்ரீவன துர்க்கைஅம்மன் திருவுருவம் கற்சிலையில் அமைந்து காணப்பெறுகிறது. இம் மலையின் தென்மேற்கே உள்ள சாணிப்பாறை என்னும் கற்குடிலை தேவதானம்பேட்டை மக்கள் சித்தர்பீடம் என்றும் இங்கு சித்தர்கள் வாழ்ந்தார்கள் என்றும் இன்றும் வாய்மொழியாக வழங்கி வருகின்றனர். ஆனால் இக் கற்குடி சமணப் படுக்கையாக இருக்கலாம் எனத் தோன்றுகிறது. இதற்கு சாணிப்பாறை என்னும்

சொல்லாட்சியே ஆதாரமாக அமைகிறது. ஏனெனில் சமணப்பாறை என்பதே நாளடைவில் மருவி சாணிப்பாறை என மக்களால் வழங்கப்பெற்றிருக்கலாம். கரியமாமலையில் அரிய சித்த மருத்துவ மூலிகைகள் கிடைப்பதும் இதன் தனிச்சிறப்பாகும்.

## நம்பிக்கைகள் :

கரியமாமலையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவன துர்க்கைஅம்மனை வணங்கினால் குழந்தைப் பேறும் கன்னிப்பெண்களுக்கு மாங்கல்ய பாக்கியமும் கிடைக்கப்பெறும் என்னும் நம்பிக்கைகள் தேவதானம் பேட்டை மக்களிடையே தொன்றுதொட்டு காணப் பெற்று வருகிறது.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| 1. பதிப்புரை | 6 |
| 2. ஸ்ரீ வனதுர்க்கையம்மன் வரலாறு | 11 |
| 3. ஸ்ரீ வனதுர்க்கையம்மன் பாடல்கள் | 15 |
| 4. ஸ்ரீ வனதுர்க்கையம்மன் போற்றிகள் | 65 |
| 5. செய்யுள் முதற்குறிப்பகராதி | 71 |

## விநாயகர் துதி

ஆதி முதல் கடவுளான
ஐங்கரா உன் பாதம் போற்றி
பாதிமதி சடையணிந்த
பரமனின் பாலா போற்றி
சோதியாய் நிறைந்த எங்கள்
துர்க்கையை அனுதினமும்
ஓதிட வரம் தருவாய்
உமையவள் பாலா போற்றி 1.

## ஓம் விநாயகா

ஓம் வினாயகா சரணம் ஓம் வினாயகா சரணம்
ஓம் வினாயகா சரணம் கருவில் பிறக்காத
உருவாகி வந்த கரியமா மலையில் அமர்ந்தவளே
வன துர்க்கை அம்மனை நாங்கள துதித்துபாட
வினாயகாநீ எங்கள் நாவில் இருந்து அருள்புரி
ஓம் வினாயகா ஓம் வினாயகா ஓம் வினாயகா
ஓம் ஓம் ஓம். 2.

# ஓம் விநாயாகா

கனக துர்க்கை விநாயகரே கருணையுள்ள கஜமுகனே
கரங்கூப்பி சிரம்குனிந்தேன் ஐங்கரா எங்களை
காத்தருள் புரிவரும் சங்கரா
காத்தருள் புரிவரும் ஐங்கரா
அருகம்புல் மாலைபோட்டு அவல்பொரி கடலையிட்டு
அப்பமும் முக்கனியும் தொப்பையப்பா
நான்படைத்தேன் - கனக
சக்தி சிவன் இருதருமே சர்வயோக உலகமென்று
சுற்றி வந்து மாங்கனியை பெற்ற ஐங்கரா - நாங்கள்
நந்தி உன்னை நான் தொழுதேன் ஐங்கரா
நந்தி உன்னை நான் தொழுதேன் ஐங்கரா
நாடும் வீடும் செழித்திடவே
பாடும் பக்தர் வாழ்ந்திடவே
ஓடிவந்து வரம் தருவாய் ஓம் ஓம் ஓம் கணேசா (கனக)
நான்முகன் சாரதியாகி நந்தி வாகன சிகனும்
தேரேறி போகும் போது ஐங்கரா
பாதி வழிதனிலே ஐங்கரா
அச்சை முறித்தவனே அரன் ரதத்தை தடுத்தவனே
பச்சைவண்ணன் மருமகன் அச்சைகூட்டி
கொடுத்தவனே -கன
தேவதானம்பேட்டை மேற்புரத்தில் அமர்ந்தவனே

தேடிவந்து சரணம் செய்தேன் ஐங்கரா
திருமுருகனுக்கு மூத்தவனே சங்கரா
திருமுருகனுக்கு மூத்தவனே ஐங்கரா
சித்திபுத்தி இருவரோடு முக்தி தரும் முதல்வோனே
அத்திமுகா அருள்கொடுந்து அடியாரை காப்போனே. 3

# சரஸ்வதி துதி

முந்தி முதல கேட்டு கலைவாணிக்கு
முல்லைமலர் போட்டு எனக்கு
பிசந்தமிழை ஊட்டு சரஸ்வதியே
செல்வம் தந்து காட்டு - கல்வி
செல்வம் தந்து காட்டு
மூத்தமிழை தாரும் முல்லை வனம் போல
வல்லவியே நீயும் வருமைப் பிணியை ஒட்டு - முந்தி
என் நாவில் இருந்து காட்டு என்னை
நல்லவழி ஓட்டு வம்பு தொல்லைகள் என்னைவிட்டு
தூரபோக நீயும் விரட்டு
தூரபோக நீயும் விரட்டு
நாடி பலரும் தேடிவரவும்
பாடிகொடுக்க நீ எனக்கு பலவழி காட்டு (முந்தி)
இந்த பாலன் விளையாட்டு
எம காலனையே ஒட்டு அவன்
பாசகயிர் கேட்டு நீ
பக்குவமாய் சிறைபூட்டு
பல ஆண்டுகாலம் வேண்டி உன்னை நான்
மாண்ட பிறகு என் மகிமையைக் காட்டு (முந்தி)

நவதுர்க்கா பாட்டு இதை
நான் பாட கேட்டு நீ
நாடிவந்து காட்டு எனக்கு
நல்லருளை காட்டு கலைவாணி எனக்கு
நல்லருளை காட்டு
ஞாயிறு செவ்வாய் வெள்ளக்கிழமைகளில்
தாயே வந்திடு தமிழ்மொழி காட்டு (முந்தி) 4

## வசனம்

ஓம் கலைவாணி சரணம். ஓம் கலைவாணி சரணம், ஓம் கலைவாணி சரணம். கருவில் பிறக்காத உறுவாகி வந்த கரிய மாமலை வன துர்க்கை அம்மனை நாங்கள் துதித்துப்பாட கலைவாணி நீ எங்கள் நாவில் இருந்து அருள்புரி ஓம் கலைவாணி சரணம். ஓம் கலைவாணி சரணம் ஓம் கலைவாணி சரணம்.

ஓம். ஓம். ஓம்.

# அவையடக்கம்

## வணக்கம்

வணக்கம் வணக்கம் வணக்கம்
ஐந்து முகம் படைத்த ஆதிசிவன் மைந்தன்
ஐங்கரனுக்கு என் வணக்கம்.
ஆறு பொரியாகி சரவணையில் உதித்த
ஆறுமுகனுக்கும் வணக்கம்.
அரிஹரன் பிரம்மன் அலைமகள் மலைமகள்
கலைமகளுக்கும் வணக்கம் எங்கள்
ஆதிபராசக்தி சோதி உருவாய் வந்த
எங்கள் அம்மை துர்க்கைக்கும் வணக்கம்
அய்யனார் ஐயப்பன் அருள்தரும் வேடியப்பா வணக்கம்:
இந்த அண்டம் நடுங்கிட கண்டவர் திடுக்கிடவே
அதி வீரபத்திரனுக்கும் வணக்கம்.
இச்சபை வந்தமார்ந்த தந்தை தாய்மார்கள்
அனைவருக்கும் வணக்கம்.
கிராமத்தலைவருக்கும் பெரியோர் அனைவருக்கும்
சிறுவர் அனைவருக்கும் வணக்கம்
கருத்துடன் எழுதவும் இசைவுடன் பாடவும்
பொருத்தம் தெரியாத புத்தியில்லாத என் வணக்கம்
இனிமையாக இல்லையெனில் இருந்து மனம் பொருத்து
செவி கொடுத்து கேட்பின் எங்கும் நிறைந்த

துர்க்கை அருளது கிடைக்கும் (வணக்கம்)
நம்பினோர் கெடுவதில்லை அம்மாள்
கைவிட்டதில்லை
நாடிவந்து சேவித்த நல்லறிவாளருக்கு வணக்கம்.
நவதுர்க்கை ஓம்துர்க்கை காப்பாய் துர்க்காவென்று
நாவால் ஜெபித்துநன் மார்க்கமடைந்த
நலமுள்ள பெரியோருக்கு வணக்கம்.
துர்க்கையம்மன் பக்தருக்கும் கலைகுழுவாணருக்கும்
வணக்கம்.
இதில் தப்பு பிழை ஏதிருந்தால் செப்புகிறேன்
உங்களுக்கு
ஒப்புக்கொள்ள வேணுமாய் வணக்கம்.
பாரதம் ராமாயணம் சீறாய் அறிந்தவர்க்கும்
பலகவி வாணருக்கும் வணக்கம்
இந்த பாலன் துர்க்கையம்மனை கரம்கூப்பி
சிரம் குனிந்து
பாடத் துவங்க உள்ளேன் வணக்கம். 5

# கனவு பாட்டு

வனதுர்க்கா தாயே உன்னை வணங்க வந்தது நானே
3-11-57 தானே படிக்க தெரியாது எனக்கு
பாடபுரியாது
நாடிவந்து கனவில் சொன்ன நவதுர்க்கா தாயே
துன்மதி ஆண்டு சித்திரைத் திங்கள் எட்டாம் நாள்
20-4-1981 தானே புதன்கிழமையன்று துர்க்கை
நாடகத்தை
பாடிபுகழும் பெருமை வந்ததம்மா வனதுர்க்கா தாயே
இந்த ஜென்மத்தில் நீயே வரம் கொடுத்தாயே
கந்தனைபோல் எந்தனுக்கு கருணை தந்தாயே
சரணம் சரணம் தாயே என் சஞ்சலத்தை தீரும்
சர்வலோக மாதா என் நாவில் இருந்து காரும்
பக்தருக்கு தாயே நான் சொன்னபடி நீயே
என்கருத்திலிருந்து காரும் எனக்கு நல்லருளை தாரும்
கோடி கோடி வணக்கமம்மா கும்பிட்டு
வணங்குகிறேனே
கனதுர்க்கா தாயே வரம் தருவாய் நீயே. 6

# ஓம் எனும் அட்சரத்தில்

ஓம் எனும் அட்சரத்தில் வனதுர்க்காதேவி
அம்மா வன துர்க்காதேவி - நீ
உருவாய் வந்த தாயென வனதுர்க்காதேவி
திருசடையோன் இடபாகம் பெற்ற திகம்பரியே
அம்மா எங்கள திகம்பரியே அம்மா
திரிபுர சுந்தரியே தேடிவந்தேன் அம்மா
எத்தனையோ ஆண்டு காலம் ஏறிவந்தேனம்மா
மலை ஏறிவந்தேன் அம்மா - நீ
எட்டாத கனியாக இருக்கலாமோ சும்மா
எத்தனையோ ஆண்டுகாலம் ஏறிவந்தேனம்மா
மலை ஏறிவந்தேன் அம்மா - நீ
எட்டாத கனியாக இருக்கலாமோ சும்மா
எத்தனையோ சோதனைகள் எனக்கு தந்ததுண்டு
அம்மா எனக்கு தந்ததுண்டு நான்
அத்தனையும் பொருத்திருந்தேன் உன்
அருள்பெறவே கண்டு
பௌர்ணமி நாவிலே பாடி வந்தேன் அன்னை
பாடிவந்தேன் உன் பாதசேவை கண்டால்
விடமாட்டேனம்மா
ஆறுமுகன் வேல்போல அழியாத பொருள் தந்து
அம்மா அழியா பொருள் தந்து நீ

ஆதரித்து அருள்புரிவாய் அம்பிகையே வந்து
உனக்கும் எனக்கும் வெகுதூரமா உத்தமியே சொல்
அம்மா உத்தமியே சொல்லு நான்
ஒருநாளும் விடமாட்டேன் காட்சி தந்து நில்லு
நான் வணங்கி உனைதுதிப்பேன் வந்திடம்மா இங்கு
நீ வந்திடம்மா இங்கு இந்த வனமதில்
புகழுமுண்டு தந்திடுவாயம்மா 7

# கனகதேவி

கனகதேவி பாட்டு துர்க்கையம்மனுக்கு
கற்பூர தீபம் காட்டு பாமாலை நான் போட்டு
தினமும் பணிந்திட்டேன் பாராட்டி தினம்
பணிந்திட்டேன் பாராட்டு
காலையும் மாலையும் வேலை தவறாமல்
நாளை விணாக்காமல் நாடியே பூப் போட்டு (கன)
தீப ஒளி போட்டு இருகரமதை நீ நீட்டு
சிந்தையை நிலைநாட்டு நீ செப்புவாய் வாய்விட்டு
நீ செப்புவாய் வாய்விட்டு
கெங்கனமால் தங்கையை எங்கு நினைத்தாலும்
அங்கு வந்துனக்கு ஆதரிப்பாள் கேட்டு (கன)
இப்பிறவியில் காட்டு என் பாவமதை ஓட்டு
ஞானமதையூட்டு துர்க்கையம்மன் எனக்கு
நல்லவழி காட்டு - உனக்கு நல்ல வழி காட்டு
நானினி பிறவாதிருந்திட நாரணன் தங்கையே
எனக்கு நல்லருளைக் காட்டு (கன)
சிங்க சவாரி விட்டு இந்த சிறுவன் முன்னே காட்டு
ஜெயராமனின் பாட்டு நீ செந்தமிழைக் கேட்டு
துர்க்கையே செந்தமிழைக் கேட்டு
செக ரட்சகி நீயுமே வந்தெனக்கு
ஒரு முறையாகிலும் உன் திருமுகத்தை காட்டு(கன)8

# *கரியமாமலை ஜோதி பார்த்தது*

தேப்பேட்டை கரியமாமலைஜோதி பாத்தது 31.12.90
முந்தி முதல் பார்த்தது குருசாமி தானுங்க
பின்னர் கும்பலோடு பக்தரெலாம் கண்ட காட்சிங்க
சத்தியமாய் உங்களுக்கு நானும் சொன்னேங்க
அந்த சஞ்சீவி மலைக்கு வந்து பாருங்க
முப்பெயர் கொண்டதோ அந்த மலைங்க
மூவர் தேவர் ரிஷிகளெல்லாம் வாழ்ந்த மலைங்க
அம்மனுக்குத் தென்மேற்கு திசைதானுங்க
மாலை நான்கு முப்பது மணிக்கு ஜோதி கண்டாங்க (தேப்)
பிரமோதூத வருஷம் தனிலே மார்கழி முழுநிலவில்
திங்கள் பதினோராம் தேதியிலே நாங்கள்
மங்கலமாய் சோதி கண்டோம் மலைதனிலே (தேப்)
மார்கழி பருவத்து மாலை போட்டு நீங்க வாங்க
மகர ஜோதி காண எல்லோருமாக வாங்க
ஒவ்வொரு வருஷத்திலும் உண்டுதானுங்கஅந்தஒளி
பார்த்த அனைவருக்கும் நன்மைதானுங்க
இன்னும் ஒரு எண்ணமது எனக்கிருக்க
எத்தனையோ ஆண்டுகளாய் பிடித்திருக்க
அன்னை துர்க்கா தேவியரும் அருள் கொடுக்க
அதிவிரைவாய் வந்திடுவாள் மனங்க களிக்க (தேப்)9

# முல்லை மலர் எடுத்து

மார்கழிப் பருவத்திலே மாலையது நானணிந்து
மலையேறிப் போவேன்
பேட்டைமலையேறிப் போவேன்
பக்தர் கூட்டத்திலே பக்தியோடு நானும் சென்று
பாதசேவை கண்டிடுவேன் துர்க்கை
பாதசேவைகண்டடீவேன்
அந்தரி சுந்தரி ஆயிரம் கண்ணுடையாள்
அம்பிகையை நான் துதிப்பேன் - என்
உள்ளமதில் உன்னை நம்பியே நானிருப்பேன்
முல்லை மலரெடுத்து நல்ல சரம் தொடுத்து
உள்ளம் குளிரப் பார்ப்பேன் - துர்க்கையை
உள்ளம் குளிர பார்ப்பேன்,
கற்பூர தீபமேற்றி கருத்தோடு உன்னை நோக்கி
கரங்கூப்பி வணங்கிடுவேன் துர்க்கையம்மனை
கரங்கூப்பி வணங்கிடுவேன்.
எல்லா உயிரும் நீயே சொல்லுது புராணமம்மா
எம்பெருமான் ஈசனையும் படைத்த தாயே இந்த
ஏழைகட்கு அருள் கொடுக்க வருவாய் நீயே
திருஞான சம்மந்தருக்கும் அபிராம பக்தருக்கும்
திருமுகத்தை காட்டிய தாயே - என் முன்னே
ஒருமுறை தோன்றிடுவாயே
என் பாவம் பறந்தோடும்படி உன்னை வேண்டி
பௌர்ணமி நாளில் துர்க்கையம்மா உன்னை
பார்க்க ஆவல் கொண்டேன் இவ்வேளையிலே. 10

# ஓசைக்கு மணியை கட்டு

மைந்தரில்லா மங்கையரே கேட்டுக்க
மாதம் ஒரு பௌர்ணமியை பார்த்துக்க
மஞ்சள் குங்குமம் தாலி கயிறு கண்ணே ரத்தினமே
பேட்டைமலைக்கு நீ வாங்கிவாரும் பொன்னு ரத்தினமே
மாவிளக்கு போட்டுக்க தீபமது ஏத்திக்க
சர்க்கரை பொங்கல் படையல் வைத்து கண்ணே
ரத்தினமே நீ
சந்தோஷமாய் சூடம் ஏற்று பொன்னு ரத்தினமே
வணங்கி நின்னுக்க வன துர்க்கையை நெனச்சி
வாங்கி வந்த மஞ்சள் கயிற்றை கண்ணே ரத்தினமே
உன் கழுத்தில் நீயும் கட்டு பொன்னு ரத்தினமே
வாழைக்கு கீழ்கன்று வளர நீ பன்னு
வந்து மைந்தன் பிறந்திடுவான் கண்ணு ரத்தினமே
உன் வருத்தமும் நீங்கிவிடும் பொன்னு ரத்தினமே
ஆசைக்கு குழந்தை தூக்கு ஓசைக்கு மணியை கட்டு
காசுக்கு வருந்த வேண்டாம் கண்ணு ரத்தினமே
நீயும் தூசுபோல் நினைத்துவிடு பொன்னு ரத்தினமே
கவனமாய் சொன்னதை நீயும் கேட்டு
கருத்திலே வச்சிக்க பொன்னு ரத்தினமே
எத்தனையோ பிரார்த்தனைகள் கண்ணே ரத்தினமே
அதுஇனி ஒன்றும் செய்யாதிருக்குமம்மா
பொன்னுரத்தினமே. 11

# எங்கும் நிறைந்த துர்க்கா

கலியுக கடவுளது கண்கண்ட தெய்வது கனகதுர்க்க
கண்டு தரிசனம் செய்யும் தொண்டருக்கு
அருள்தந்த மண்டலம் புகழும்மகா துர்க்கா - இந்த
மண்டலம் புகழும் மகா துர்க்கா
மனதில் நினைத்தவர்க்கு தினமும் துதித்தவர்க்கு
சினங்கொண் டெதிர்த்தவரை வதைக்கும் துர்க்கா
மலை ஏறி வந்தவர்க்கு மழலை வரம் கேட்டவர்க்கு
மனம் மகிழ கொடுத்த துர்க்கா - அவர்கள்
மனம் மகிழ கொடுத்த துர்க்கா
தீராத வினை தீர்ந்து தேடிவரும் பக்தர்கோடி
தேப்பேட்டை மலை துர்க்கா திருமாலின்
தங்கையாகும் சிவனுடை மங்கையாகும்.
தேவர் துயர் தீர்த்த துர்க்கா - அந்த
தேவர் துயர் தீர்த்த துர்க்கா,
ஏளனமாய் பேசி கேலிகள் செய்பவரின்
இருமாப்பை அடக்கும் துர்க்கா - அவர்
இருமாப்பை அடக்கும் துர்க்கா
ஏட்டு திசைகளிலும் ஈரேழு உலகமும்
எங்கும் நிறைந்த துர்க்கா - அவள்
எங்கும் நிறைந்த துர்க்கா
சக்தியின் உருவத்திலே எத்தனையோ அவதாரம்

அத்தனைக்கும் நிறைந்த துர்க்கா
சண்ட மாறுதம்போ வந்தெதிர்த்த மகிடனை
சம்ஹாரம் செய்த துர்க்கா - அவனை
சம்ஹாரம் செய்த துர்க்கா
வந்து வணங்கிடுங்கள் என் சொல்லை நம்பிடுங்கள்
கந்தனைப்போல் நினைத்து துர்க்கா
கந்தனைப்போல் நினைத்து துர்க்கா
மந்திரமும் ஏவலும் சூன்யம் செய்த
மடையனை மடிப்பது துர்க்கா - அந்த
மடையனை மடிப்பது துர்க்கா. 12

# ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே

ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே
பரமானந்தம் ஆனந்தம் ஆனந்தமே
சக்தியை துதித்தால் ஆனந்தமே நீ
பக்தியை புரிந்தால் பரமானந்தமே
எத்திசையும் புகழ் ஆனந்தமே சக்தி
எங்கும் நிறைந்த பரமானந்தமே - (ஆனந்தம்)

முந்தி முதலே முளைத்து வந்தவளே
முக்கன்னியாகவே அவதரித்தவள் அவள்
முக்கோணத்து சக்கரம் தனில் அமர்ந்தவள்
மூவர் தேவரைக் காக்க வந்தவள் (ஆனந்தம்)

தேப்பேட்டை மலைக்கு வாருங்களேன்
தேவி துர்க்கையை பாருங்களேன்
கேட்ட வரமே தருவாள் அந்த
கருட வாகனவன் தங்கையவள் (ஆனந்தம்)

திருவண்ணாமலை தனிலே ஈசான்ய மூலையிலே
மா தவம் இருந்தவளாம்
மகிடா சூரனைக் கொன்றவளாம் (ஆனந்தம்)

கர்த்தவனை வேதம் கேட்டவளாம்
கன்னித் துர்க்கையாய் வந்தவளாம்
கன்னிப் பெண் துயர்த் தீர்த்தவளாம்
கரிய மாமலையில் வாழ்பவளாம் (ஆனந்தம்)

தேடி துருவனைக் கொன்றவளாம்
வேர் துயரைத் தீர்த்தவளாம்
ஆடி மாதம் ஆதிவாரம் பெண்
ஆடு பலி ஏற்றவளாம் (ஆனந்தம்)

சப்த ரிஷீயை காப்பவளாம்
தெர்ப்ப சுனையில் குளிப்பவளாம்
அற்புதமாய் சித்தரோடு ஆனந்தமாய் இருப்பவளாம்
(ஆனந்தம்)

அர்த்தனார் ஈசன் தேவியல்லவா
அனாதை ரட்சகி சேதி சொல்லவா
பக்தனைக் காக்க பொன்னாற்றங்கரையில்
உத்தமி சாதம் கொடுத்தவள் அல்லவா
(ஆனந்தம்)

குன்றேறி வரமே கொடுக்க வந்தவள்
குழந்தை வரமே கொடுக்க வந்தவள்
மன்றாடியே மா மலையில் வந்தவள்
மனக்கவலையை தீர்க்க வந்தவள் (ஆனந்தம்)

எத்தனை மலைகள்ஏறி யிருந்தாலும்
பேட்டை மலைபோல ஆனந்தமில்லை
பக்தரைக் கேட்டு நீ பார்த்திடவேண்டும்
பௌர்ணமி நாளில்வந்திடவேண்டும்(ஆனந்தம்)
எத்தனைகத் துன்பங்கள வந்துற்ற போதும் நீ
அத்தனையும் பொருத்திருந்து
நெஞ்சில் நினைத்தாலே ஐந்தெழுத் தேவி
நேரில் வந்து காட்சி தருவாள் (ஆனந்தம்)
பக்தர்கள் பாடிடும் பாட்டு இதை
பக்தியாய் எல்லோரும் கேட்டு
நித்தமும் வந்தாலே முக்தியும் பெறுவீர் - இது
சத்தியம் சத்தியம் சத்தியம் சொன்னேன் 13

# பாரம்மா பாவம் தீரம்மா

தேவி துர்க்கா தேவி
தினம் துதித்தேன் மனதில் நினைத்தேன்
திருவடியை காட்டிடவே ஒரு நொடியில் ஓடி வாரும்
தேவி துர்க்கா தேவி
தென் மதுரை வாழ்பவனே திருமுருகன் தாயாரே
உன்னைவிட துர்க்கையம்மா ஒருவருமே
துணையில்லை (தேவி)

பாரம் பாவம் தீரம்மா
பருவதராஜனுக்கு திருமகளாய் அவதரித்து
பாலன் திருசம்மந்தருக்கு ஞானப்பால் கொடுத்தாய்
பஞ்ச அக்ஷரநீலி உனை கெஞ்சி கேட்டேன் சூலி
தஞ்சமென்று நினைத்தேன் தாயே துர்க்கா வருவாய் நீ
(தேவி)

காருமம்மா அருளைத் தாருமம்மா
கரியமாமலை வாழ்பவளே பிரியமுடன் அமர்ந்தவளே
தெரியுதம்மா உந்தன் புகழ் தேடிவந்த பக்தருக்கு
காருமம்மா அருளைத் தாருமம்மா
கருவாகி நான் பிறந்து உருவாகி உனை துதித்தேன்
வருவாய் நீ எந்தன் முன்னே வனதுர்க்கா தேவியரே
(தேவி)

கோபமா துர்க்கா கோபமா - நான்
கொடுமையாக பேசினாலும் அடிமையாக்காதே
குற்றமதை தான் மறந்து உற்றதுணை நீ வருவாய்
கோபமா துர்க்கா கோபமா
கூறு என் மொழியை கேட்டு
வாரும் வாரும் மலையை விட்டு
நாடிவந்து காக்கவேண்டும் நவதுர்க்கா தேவியரே (தேவி)

14

# எந்தன் தாய் துர்க்கையம்மா

எந்தன் தாய் துர்க்கையம்மா இணையடி சரணமம்மா
உந்தன் பிள்ளை எந்தன் முகம் பாருமம்மா
எனக்கு உன்னைவிட வேறுகதி யாரம்மா
எனக்கு உன்னைவிட வேறுகதி யாரம்மா
ஆதிசிவன் தேவியம்மா பாதிஉடல் பெற்றாயம்மா
பாதிமதி சடையணிந்த பரமனோடு நடித்தாயம்மா
(எந்தன்)

கற்பூர தீபமம்மா காலை மாலை துதித்தேனம்மா
அற்புத காட்சி தந்து அருளுவாய்.
நீ வந்தென்னைக் காருமம்மா அதிவிரைவாய்
வந்தென்னைக் காருமம்மா
ஆதி சக்தி நீயம்மா ஆயிரம்பேர் உனக்கம்மா
துர்க்கை என்று நானம்மா சொல்லும் பழக்கம்
தானம்மா (எந்தன்)

---

* தேவதானம்பேட்டை

சிங்கம் மீது ஏறம்மா இங்கு வந்து பாரம்மா
தங்கசூலம் கரம் பிடித்து நீயம்மா
சப்த ரிஷிகளோடு வந்தென்னைப் பாரம்மா
சப்த ரிஷிகளோடு வந்தென்னைப் பாரம்மா
பாவம் பறந்தோடுமம்மா பார்த்தாலே போதுமம்மா
ஆத்தாளும் நீயம்மா ஆதிமாயன் தங்கையம்மா
(எந்தன்)

ஜெகரட்சகியும் நீயம்மா ஜெகம் புகழும் தாயம்மா சிந்தை
ஜெயராமனும் பாடுகிறேன் ஜெயராமனும் பாடுகிறேன்
சிறுவன் பிழை பொருத்திடம்மா
சீக்கிரம் வரம் கொடுத்திடம்மா
அரியும் சிவனும் படைத்தாயம்மா அடியேன் துயர்
தீர்த்திடம்மா (எந்தன்)

# *தேப்பேட்டை அமர்ந்தவனே முருகா

தேப்பேட்டை அமர்ந்தவனே தேவர் துயர் தீர்த்தவனே
தேடிவந்தேன் உந்தனையே முருகையா
சேவல்கொடி பிடித்தவனே வருக அப்பா
சேவல்கொடி பிடித்தவனே வருக
தேவிவள்ளி நாயகனே தெய்வானை மணவாளா
தீராத வினை தீருமே ஓராறு முகமென்றால் ஓடுமே
(தேப்)சிவனுடை நெற்றிக் கண்ணில் ஆறு பொரியாய் வந்து சரவணையில் உதித்தவனே முருகா சரவணமென்று உனையடைந்தேன் வருவாய் - அப்பா சரணமென்று உணையடைந்தேன் வருவாய் சங்கரியாள் புத்திரனே தங்கமயில் வாகனனே எங்கும் நிறைந்தவனே எம்பெருமான் மருமகனே.

(தேப்)

தாருகன் சிங்கமுகனை வேறொடருத்தவனே தந்தைக்கு உபதேசம் செய்த முருகா எந்தனுக்கு உபதேசம் செய்ய வருக எட்டேழும் தெரியாது ஈரேழும் புரியாது எப்போது நீ வருவாய் அப்போது நான் காண்பது

(தேப்)

அருட்பா மலரே திருப்புகழ் பொருளே
ஆறுபடை வீடுகொண்ட முருகா
பாடுகிறேன் உந்தனையே வருக
பாலன் அருணகிரிக்கு பாட வரம் தந்தவனே
காலம் கடத்தாமல் காரும் ஜெயராமனையோ

(தேப்) 16

# அடிவார கணபதியே தில்லாலே லேலோ

அடிவார கணபதியே தில்லாலே லேலோ
நாங்கள் ஆதி சக்தியை பார்க்க போறோம் நன்னானே நானா
தும்பிமுக ஐங்கரன் தில்லாலே லேலோ
துர்க்கையை பார்க்க போறோம் நன்னானே நானா
பாஞ்சாலி ஆலயத்தில் தில்லாலே லேலோ
பக்தர்கள் ஒன்று கூடி நன்னானே நானா
இருமுடி கட்டிகிட்டு தில்லாலே லேலோ
எல்லோரும் பயணம் ஆனோம் நன்னானே நானா
வீதிவழி கடந்து தில்லாலே லேலோ
ஆதிசக்தியை பார்க்க போறோம் நன்னானே நானா
கரியமாலையை வலமாய் வந்து தில்லாலே லேலோ
கன்னித்துர்க்கையை காணப் போறோம் நன்னானே நானா
மலையாம் கலைகடந்து தில்லாலே லேலோ
மகேஸ்வரியை காணப்போறோம்

கோட்டைகரை ஏறி தில்லாலே லேலோ
பெருமாளை பாடி வந்தோம் நன்னானே நானா
மஞ்சள் இருக்கும் மலை தில்லாலே லேலோ
மாமுனி வாழும் மலை நன்னானே நானா
அத்தனையும் நான் கடந்து தில்லாலே லேலோ
ஆத்தாளை காணப்போறோம் நன்னானே நானா
சித்தர்கள் வாழும் மலை தில்லாலே லேலோ
பக்தர்கள் தேடும் மலை நன்னானே நானா
ஏழுமலை கடந்து தில்லாலே லேலோ
எங்கள் துர்க்கையை பார்க்கப்போறோம் நன்னானே
நானா
ஆத்தாளின் சன்னதியை தில்லாலே லேலோ
பார்த்தாலே பாவம் தீரும் நன்னானே நானா
கற்பூர தீபமேற்றி தில்லாலே லேலோ
அற்புதமாய் பூசை செய்து நன்னானே நானா
இருமுடியை இறக்கிவிட்டு தில்லாலே லேலோ
எல்லோரும் ஒன்று கூடி நன்னானே நானா
பார்க்கப்போறோம் சோதிதன்னை தில்லாலே லேலோ
பக்தர்களே வந்திடுங்கள் நன்னானே நானா
கண்டு தரிசனம் செய்திடுவோம் தில்லாலே லேலோ
கரம்கூப்பி வணங்கிடுவோம் நன்னானே நானா
கஷ்டமெல்லாம் போக்கிடுவாள் தில்லாலே லேலோ
கருணை தந்து காத்திடுவாள் நன்னானே நானா 17

# பூமாலை போட்டுகிட்டு பொன் ரதத்தில்

மஞ்சளாடை கட்டிகிட்டு வேப்பிலையை எடுத்துகிட்டு
பேட்டைமலை துர்க்கையம்மன் ஆடிவரலாம்
விளையாடி வரலாம்
நாகன் குடைபிடித்து சிங்கமதில் ஏறிகிட்டு
கையில் சூலம் எடுத்துகிட்டு நாடி வரலாம்
துர்க்காவை தேடி வரலாம்
பூமாலை போட்டுகிட்டு பொன் ரதத்தில் ஏறிகிட்டு
புன்னகையாய்ப் பார்த்துகிட்டு புறப்பட்டு வரலாம்
பொங்கல் கேட்டு வரலாம் பம்பை ஒலிகேட்டு வரலாம்
உடுக்கை நாதம் வாங்கிகிட்டு பாட்டின் இசைதேடி
பார்க்க வரலாம் துர்க்காவை கேட்க வரலாம்
கன்னிகளை அழைத்துகிட்டு கந்தனையே இட்டுகிட்டு
சந்தனத்தை பூசிகிட்டு சடுதிவரலாம் சர்வமாக வரலாம்
வெண்ணீரை எடுத்துகிட்டு அள்ளி அள்ளி வீசிகிட்டு
வினைகளையே தீர்த்துகிட்டு விளையாடி வரலாம்
விருப்பத்தோடு
கரியமாமலையை சுத்திகிட்டு கிராமங்களில் நடந்துட்டு
கருணையதையே தந்துகிட்டு காக்க வரலாம்
மக்களை பார்க்க வரலாம்
அருளதையே எடுத்து கிட்டு பொருளதையே
கொடுத்துவிட்டு

மருளதையே ஆடிகிட்டு மாதா வந்தாளாம்
மனமகிழ்ந்து நின்றாளாம்
சந்தனத்தை பூசிகிட்டு சடுதியில் வரலாம் சர்வ மாதா
வரலாம் 18

## மைந்தனாய் நினைத்து என் மனத்துயர்

செய்யுள் :

தந்தையும் எனக்கில்லை தாயார் ஒருவரில்லை
தமையனில்லை தம்பியில்லை தாரமுமில்லையம்மா
உற்றார் ஒருவரில்லை உறவின் முறை யாருமில்லை
ஓம் துர்க்கா உன்னைவிட இவ்வுலகில்
எனக்கு ஒரு துணையுமில்லை சோதனை போதும்
இனி சோதிக்க வேண்டாம் நான்
வேதனைப்பட்டு வேகுதே உள்ளம்
எனக்கு வெந்தனலாகுதம்மா
மைந்தனாய் நினைத்து என் மனத்துயர் தீரும்
மலையடி துர்க்கா மறுவாழ்வு தாரும்
உன்மலரடி போற்றினேனே. 19

# அம்மன் புகழ் ஓங்குது பார்

அம்மன் புகழ் ஓங்குதுபார் பேட்டை மலையிலே
துர்க்கையம்மனை பக்தர் கூடி தேடி நாடுது
ஆறுகால பூஜை செய்ய அர்ச்சகர் இல்லை ஆனால்
அனுதினமும் ஆறுகால பூஜை நடக்குது
ஓம் துர்க்கா ஓம் துர்க்கா ஓம்
ஓம் துர்க்கா ஓம் துர்க்கா ஓம் (அம்மன்)

ஒருவர் பின் ஒருவராக பக்தர் போகிறார்
அந்த உச்சி மலையில் தீபம் போட்டு பூசை செய்கிறார்
கலியுகத்தில் கண்டெடுத்த கண்கண்ட தெய்வம்
கருத்துடனே துதித்தவருக்கு துயர்நிலை போகும்
ஓம் துர்க்கா ஓம் துர்க்கா ஓம்
ஓம் துர்க்கா ஓம் துர்க்கா ஓம் (அம்மன்)

தருமராஜன் குளக்கரையில் அவதரித்தவள்
தாய் சொன்ன மொழிக் கேட்டு மலையிலமர்ந்தவள்
தாய்குலத்தை தடுத்து வெகு வருஷம் இருந்தவள்
இப்போ தாய் குலத்தை தான்றழைத்து வரத்தை
தருபவள்
ஓம் துர்க்கா ஓம் துர்க்கா ஓம்
ஓம் துர்க்கா ஓம் துர்க்கா ஓம் - என்று

துதித்தவர்க்கு துன்பம் வராது
தொடர்ந்து மாலை போட்டு வந்தால் நோய் இருக்காது
தேவதானம்பேட்டை என்றால் கரியமாமலை
அங்கு பக்தர்களும் பலர் நம்மில் கூடி மகிழ்கிறார்
ஓம் துர்க்கா ஓம் துர்க்கா ஓம்
ஓம் துர்க்கா ஓம் துர்க்கா ஓம் (அம்மன்) 20

## அன்பெனும் அகல் விளக்கு நானே

திங்களணி பொங்கரவன் சங்கரனிட பாகத்தில்
தங்கியே நீ வேதம் கேட்ட தாயே
சஞ்சீவிமலை துர்க்கை நீயே சாமுண்டி ஈஸ்வரியதை
சகல உயிர்களையும் காப்பது நீயே
நவதுர்க்கை என்பது நீயே அம்மா
வனதுர்க்கையான தாயே வட்டபாறையமர்ந்து நீயே
வரும் பக்தருக்கு அருள் கொடுக்கும் தாயே
(திங்களணி)
திருவண்ணாமலை தனிலே நீயே இரு
துர்க்கையாக அவதரித்த தாயே
ஈசான்ய முலையிலே நீயே தவம் இருந்து
முகிடனைக் கொன்றாயே தாயே (திங்களணி)
கயிலை மலைதனில் நீயே அடியார்க்கு
காட்சி கொடுத்திட்ட தாயே பேட்டை மலைதனிலே
கேட்டவர்க்கு குழந்தைவரம் கொடுத்திட்ட தாயே
(திங்களணி)

அன்பெனும் அகல் விளக்கு நானே
ஆசையென்னும் நெய்யை ஊற்றி தானே
பாசமென்ற தீபம் போட்டேன் தாயே
இந்த பாலன் முன்னே வந்திடுவாய் நீயே (திங்களணி)21

# மற்றொரு தெய்வத்தை நானே மனதில் நினைத்தது

என் பைத்தியம் தீர வைத்தியமாக தாயாக வருவது
எப்போதம்மா துர்க்கையம்மா
வருவது எப்போதம்மா பாடி அனுதினமும்
நாடி உனக்கு நான் பாமாலை போட்டேனம்மா
தினம் தினம் பூமாலை விட்டேனம்மா
என் நெஞ்சில் நினைத்ததை ஐந்தெழுத்து தேவி
நிறைவேற செய்வதெப்போ துர்க்கையம்மாநிறைவேற
நீண்ட காலமாக ஆண்டு பலவாகி
மாண்டு போன பின்னே வீனம்மா
உன்மலரடி துதித்த காரணமம்மா
மலையேறி வந்தேனே மலரடி துதித்தேன்
மைந்தனை காத்திடம்மா துர்க்கையம்மா இந்த்
மண்டலம் தன்னிலே கண்கண்ட தெய்வம்நீ
மற்றொரு தெய்வத்தை நானே மனதில்
நினைக்கிறேதானே
அன்னை நீயும் என்னை மறந்தாலே
உன்னையே உலகம் ஏசும் உதாசினமாக பேசும்
ஆலவிஷத்தையல்லவா உண்ட

அரசனை காத்தது நீயம்மா - இந்த
அடியேனை காப்பது பாரம்மா
இந்த ஏழைக்கு அருள் தந்து பாருமே நீ வந்து
என் இதயம் தன்னிலே குடி கொள்ளுமே
நான் எடுத்து குறி சொல்ல அங்கு
ஏதேனும் தவறின்றி இருக்க
என் நாவில் இருந்து எட்டு திக்கிலும்
பக்தர் தர அருள் கறந்து என் ஆசை நிறைவேறும்
காசுக்காக அல்ல அடிமை தொண்டென்று சொல்லு
அதற்கு நான் ஆசை பட்டேனா - இல்லை
அந்தோ பைத்தியம் எந்தனை காத்திடு 22

# கேளம்மா எங்கள் துர்க்கையம்மா

கேளம்மா எங்கள் துர்க்கையம்மா - நீ
கேளம்மா எங்கள் துர்க்கையம்மா
கெஞ்சி உன்னை நான் துதித்தேன்
நெஞ்சில் நினைத்து வந்தேன்
மஞ்சளிலே குளிப்பவளே என்
மனத்துயரை தீர்ப்பவளே நீ கேளம்மா
கேளம்மா எங்கள் துர்க்கையம்மா நீ
கேளம்மா எங்கள் துர்க்கையம்மா
திக்கெல்லாம் புகழ்ந்திடவே தேடி மலையமர்ந்தவளே
அக்குமணி மாலை பூண்ட அரனிடை தேவியரே
(கேளம்மா)

ஓ அம்மா இங்கு வா அம்மா
ஓ அம்மா இங்கு வா அம்மா

ஓம் என்ற ஒளியிலே உருவாகி வந்தவளே
கணேசன் கண்ணனோடு கருணாகரனை படைத்தவளே
ஓ அம்மா இங்கு வா அம்மா
சக்தி ஒன்று பாரு சமயம் பதினாறு
தில்லையிலே யாரு திருநடனம் செய்தது கேளு
(கேளம்மா)

நீயம்மா காளிதானம்மா அங்கு
நீயம்மா காளிதானம்மா
நிர்த்தனம் புரியும்போது நீலகண்டன் ஆடும்போது
தாளம் தட்ட நான்முகனும் மேளம் கொட்ட
மேகவண்ணன் நீயம்மா
ஆடியது தானம்மா அங்கு பெல்லாத காளி என்று
தில்லையிலே சொல்வதுண்டு
எல்லோருக்கும் வரம் கொடுக்கும் தில்லைகாளி நீயம்மா
துர்க்கா தாய் மலையாம் கரியமாமலை
துர்க்கா தாய் மலையாம் கரியமாமலை
கந்த புராணத்திலே கண்மூடி சுருக்கத்திலே
வந்தமர்ந்த இந்தமாலை சொந்தமலை பேட்டைமலை
மக்களெல்லாம் தேடிடும் மைந்தன் வரம்
கொடுக்கும் மலை
மாங்கல்ய துர்க்கா மலை மனங்ககவலை தீரும் மலை
(கேளம்மா)

# வணங்கித் துதித்தேன் வரமது

ஓம் வன துர்க்கா வணங்கித் துதித்தேன் நான்
வரமது தந்திடுவாய் என் கருத்தில் நீ இருந்து
பொருத்தமான அருள் வாக்கை தந்திடுவாய்
ஓம் ஓம் துர்க்கா ஓம் ஓம் துர்க்கா ஓம் ஓம் ஓம்
அனுதினமும் உன் உருவம் கண்டு என்
மனதிலே துதிப்பதுண்டு
வரும் அடியார்கள் மனம் சாந்திபெற நீ
வரவேண்டும நான் அருள்பெற (ஓம் வன)
அரனுடன் உரையும் தாயே
என் ஆவியோடு கலந்திருந்து நீயே
மண்டலம் புகழ்ந்திடவே நீயே
மலைமகளே அருள் தருவாயே (ஓம் வன)
திரிபுர சுந்தரி நீயே
திருவண்ணாமலை தனிலே தாயே
உண்ணாமுலையாக வந்தாய்
குரு நமச்சிவாயருக்கு அன்னமது கொடுத்தாய்
(ஓம் வன)

என்னாளும் அருள்கேட்டு நானே
உன் இணையடி தொழுது வந்தேனே
பொன்னான வாக்கு தாரும்
சோதனை பொறுத்திருக்க முடியாது பாரும்
(ஓம் வன) 24

# எங்களுக்கு நல்லவழி காட்டு

தேப்பேட்டை பத்தினியின் பாட்டு
ஐவர் தேவி திரௌபதியைக் கேட்டு
ஆசையோடு பாட வரங்கேட்டு
அருளதனையே நீ எனக்கு ஊட்டு அம்மா
அருளதையே நீ எனக்கு ஊட்டு
ஐந்துபதி கொண்ட அத்திநகர் தேவி
சுற்றினேன் உந்தனை என் துன்பமதை ஓட்டு (தேப்)

பாஞ்சாலி அம்மனின் தாலாட்டு
தேப்பேட்டை அமர்ந்த விளையாட்டு
பக்தர்கள் எல்லாருமே காட்டு
பக்திவழி நீங்களுமே காட்டு
பக்திவழி நீங்களுமே காட்டு
பாரதப்போரது சீராய் முடித்திட
பாஞ்சாலி சபத கூந்தலை முடித்துக் காட்டு (தேப்)

எங்களுக்கு நல்லவழி காட்டு
வறுமை பிணியதை காட்டு
தர்மதேவன் பாட்டு தங்கினதுதேப்பேட்டைகாட்டு
தங்கினது தேப்பேட்டை காட்டு
வீர சாட்டையும் மணியின் ஓசையும்

வீரகந்தமும் எல்லையெல்லாம் காட்டு
பாலன் குருசாமி தந்த பாட்டு
பாடினதை நீங்களுமே கேட்டு
பாவையரே கற்பை நிலைநாட்டு
பாண்டவரின் பத்தினிபோல் காட்டு
பாருலகில் யாவரும் போற்றவே
நளாங்கன்னிபோல் நல்ல பெயர் காட்டு

## படிப்பாட்டு

ஒன்றாம் படியே சரணம் சரணம்
உமையவள் தாயே வரணும்
இரண்டாம் படியே சரணம் சரணம்
ரேணுகா தாயே வரணும் வரணும்
மூன்றாம் படியே சரணம் சரணம்
மூலப் பொருளே வரணும் வரணும்
நான்காம் படியே சரணம் சரணம்
நாரணித் தாயே வரணும் வரணும்
ஐந்தாம் படியே சரணம் சரணம்
ஐந்தெழுத்தோன் தேவி வரணும் வரணும்
ஆறாம்படியே சரணம் சரணம்
ஆதிசக்தியே வரணும் வரணும்
ஏழாம் படியே சரணம் சரணம்
இணையடி தொழுதோம் வரணும்
எட்டாம் படியே சரணம் சரணம்
ஈசன் தேவியே வரணும் வரணும்

ஒன்பதாம் படியே சரணம் சரணம்

அம்பாள் இங்கே வரணும் வரணும்

பத்தாம்படியே சரணம் சரணம்

பருவதன் மகளே வரணும் வரணும்

பதினொன்றாம் படியே சரணம் சரணம்

பராசக்தியே வரணும் வரணும்

பனிரெண்டாம் படியே சரணம் சரணம்

பக்தரை காத்திட வரணும் வரணும்

பதிமூன்றாம் படியே சரணம் சரணம்

பலமுறை துதித்தோம் வரணும் வரணும்

பதிநான்காம் படியே சரணம் சரணம்

பரமன் தேவியே வரணும் வரணும்

பதினைந்தாம் படியே சரணம் சரணம்

பக்தரை காக்க துர்க்கா நீ வரணும் 26

# இருக்குதா இல்லையா சொல்லு

இருக்குதா இல்லையா சொல்லு தேப் பேட்டை
மலைதனில்
தெய்வமாகிய துர்க்கையம்மனுடை சக்தியது
இருந்தால் அந்த இடத்தை சொல்லு சொல்லு
(சுருள்)

எந்த நாளுமே உந்தனை துதித்தேன்
எந்தன் குலதெய்வத்தை மறந்தேன்
ஈசனை நாளும் மறந்தேன்
ஏகபராபரி உனையே துதித்தேன்

வருவதெப்போ சொல்லுவள்ளல் ஈசன் தேவி என்
உள்ளங் குளிர இந்த எல்லையில் என்னை
எல்லோரும் புகழ
வருவதெப்போ சொல்லு சொல்லு
(சுருள்)
எத்தனையோ பக்தர் உன் இணையடி தொழுதார்
அத்தனை பக்தருக்கும் அருளது கொடுத்தாய்
குரு நமச்சிவாயன் தன்னை காத்ததாய்
கோரும் பராபரி நேரில் வந்தாய் அதைபோல் எனக்கு
(இரு)
நீதியோ உனக்கு சொல்லு சொல்லு
(சுருள்)
வாதாடினால் பாதகம் நேரும்
வாழும் மலையில் வந்து நீ பாரும்
அபிராமி பக்தன் தன்னைக் காக்க
பூர்வ பட்சமே கொடுத்தது போல - எனக்கு
அட்சரம் தெரியேன் அம்மா அறியாத பால் புரியாமல்
உள்ளேன்
தெரியவே எனக்கு செப்புவாய் இப்போது
அட்சரம் தெரியேன் அம்மா
(சுருள்)
என் நெஞ்சில் நினைத்தபடி கெஞ்சி அழைக்கிறேன்
வஞ்சனை வேண்டாம் வந்தென்னை காரும்
பஞ்சபானனை தடுத்திட வேண்டும்
பராசக்தி நீ வரங் கொடுத்திட வேண்டும் - எனக்கு 27

# தாயாகுமே தணிகை முருகனுக்கு

எங்கும் நிறைந்த துர்க்கா
எங்குமிருப்பாள் ஓம் சக்தி துர்க்கா எங்குமிருப்பாள்
எட்டு திசைகளிலும் எல்லா இடங்களிலும்
இல்லாத இடமே இல்லை எம்பெருமான் தங்கையவள்
எங்குமிருப்பாள் ஓம்சக்தி துர்க்கா எங்குமிருப்பாள்
கரியமாலை வாழ்பவளாம் கருணை உள்ளம்
கொண்டவளாம்
நத்தி வரும் பக்தருக்கு நல்லவழி காட்ட வேண்டி
(எங்கும்)

தாயாகுமே அந்த தணிகைமலை முருகனுக்கு தாயாகுமே
எங்கெங்கும் வாழ்கின்ற எரும்பு முதல் யானை வரை
எந்தனுக்கு சொந்தமுள்ள தாயாகுமே அந்த
தணிகைமலை முருகனுக்கும் தாயாகுமே
என்உயிர் உள்ளவரை உன்னை நான் மறவேன்
எங்கு நான் நினைத்தாலும் அங்குவந்து
எனைக்காக்கும் (தாயாகுமே)

மூடனம்மா மூலையில்லாத மூடனம்மா
மோனவழி தெரிந்து நானும் உன்னைபாடி
ஞானம்தனை பெறவே நல்லறிவில்லாத
மூடனம்மா மூலையில்லாத மூடனம்மா
நாடி சூலமெடுத்து என் நாதனில் அட்சரத்தை

நீ எழுத வாரும்மா நீலமேகன் தங்கையரே (மூட)
வருவாயம்மா வரம் எனக்கு தருவாயம்மா

வருத்தமே நானடைந்து கருத்து மாறுமுன்னே
பொருத்தமாய் வேம்பெடுத்து புன்னகையோடு நீயும்
வருவாய் அம்மா வரமெனும் தருவாயம்மா
நானும் உன் அடிமை என்று இந்த நானிலம் போற்றிடவே
நாடி ஜெயராமனுக்கு தேடி அருள் கொடுக்கவேண்டி
வரவாய் (அம்மா) 28

## *காவேரி கரை என்ற மெட்டு*

சக்தியின் புகழ் இருக்கு
பக்தருக்கு அருள் இருக்கு
நித்தமும் துதித்தவருக்கு
நெருங்கின உறவினருக்கு
கந்தனின் தாய் இருக்கு
கருணைதாரும் எந்தனுக்கு
காலம் முழுதும் உந்தனுக்கு
கற்பூர தீபம் கொடுப்பவர்க்கு
திருஞான சம்பந்தர்க்கு
ஞானப்பால் கொடுப்பதற்கு
திகம்பரியே வந்ததர்க்கு
சீர்காழி தானிருக்கு
தேப்பேட்டை மலை இருக்கு
தேவி துர்க்கை தான் இருக்கு
ஜெயராமனுக்கு அருள் இருக்கு

சிங்கவாகனம் உனக்கிருக்கு
வந்திடம்மா எந்தனுக்கு
வரமது தருவதற்கு
வணங்கினேன் உந்தனுக்கு
வரப்பிரசாதம் எந்தனுக்கு
நம்பிக்கை எனக்கிருக்கு
அம்பிகையே நீ இருக்க
தும்பிமுகன் அருள் இருக்க
சொல்லுகிறேன் உறுதியோடு. 29

## திருப்புகழ்

தான தான தான தன
தான தான தான
தான தான தான தன
தான தான தான
ஓம் துர்க்கையரே வாரும் நான்
துதிபுரிந்தேன் பாரும் என்
துன்பமதை தீரும் இதுவே
எனக்கு போதும்.
கர்த்தன் தேவி பிரசாதம்
கன்னி துர்க்கை பாதம் நான்
கண்டு பணிவேன் நிதம் இதுவே
எனக்கு போதும்
என் ஆசை தன்னை நீக்கு அம்மா
பாசமதை போக்கு உன்
அருளதையே தேக்கு அதுவே

எனது போக்கு
மலையரசன் மகளே பேட்டை
மலைதனில் உன் புகழை
மாது துர்க்கை அருளே அதுவே
எனது பொருளே
காமாக்ஷி வருவாயே
காலன் தன்னை நீயே
அணுகாமல் ஓட்டுவாயே
வெண்ணெய் உண்டோன் தங்கை
வெண்நீரணிந்தோன் மங்கை
என் வினையை போக்கும் நங்கை
நான் வேண்டி துதித்தேன் இங்கே
எனக்கு நல்ல புத்தி தாரும் அம்மா
நாரணியே நீரும்
நான் பணிந்தேன் பாரும் என்னை
நாடி வந்து காரும்
இங்கு நாடிவந்த பெரியோருக்கும்
நான்கு வேதம் தெரிந்தவருக்கும்
ஆடிபாடி நடித்தவர்க்கும்
அடி பணிந்தேன் எல்லோருக்கும். 30

# திருப்புகழ்

தந்தன தனத்த தந்த
தந்தன தனத்த தந்த
தந்தன தனத்த தந்த தன தான
சப்பானி பிள்ளையாரே
அப்பா உனை துதித்தேன்
தப்பு பிழை பொருத்து இங்கு வாரும்
அருகம்புல் மாலை போட்டு
அவல் பொரி கடலை இட்டு
அன்புடன் உனை அழைத்தேன் என்னை பாரும்
தந்தை தாயை வலமாய் வந்து
முந்தி கனி பெறவே
கந்தனும் மனது வாடி அவர்ஓட
பங்காளி முருகனுமே
பங்கம்து தானடைந்து
பழனிமலை தனை அவர் நாட
திரிபுரம் எரித்திடவே
அரனும் ரதமேறி
திசைமுருகன் சாரதியாய் அங்குபோக
அச்சது பொடிபடவே
தச்சகன் மருமகனே
கச்சனி பரமன் மனம் நோக

நான் சக்தியை துதித்து பாட
நித்தமும் துதி புரிய
சித்தி புத்தி மாமியாராம் சிவகாமி
என் புத்தியில் அமர வாரும்
சித்தி வினாயகனே
கர்த்தனிட தேவியராம் துர்க்காதேவி. 31

## திருப்புகழ்

தந்த தனத்த தனன தன
தந்த தனத்த தனன தன
தந்த தனத்த தனன தன தன தான
சக்தி உனை துதிப்பேன் அனுதினமும்
பக்தியோடு நினைப்பேன் என்
சித்தமதில் மறவேன் நான் ஒருநாளும்
கர்த்தன் தேவி நீயே உலகமதில்
சுற்றி அமர்ந்த தாயே எனக்கு
புத்தி தருவாய் நீயே அம்மா பல நாளும்
பேட்டை மலை என்றதும் பேறாம்
பைத்தியமானதும் பேறாம்
கோவிலாய் நினைத்ததும் அது எதனாலே
துர்க்கையம்மன் நீயே மலைதனில்
சிலை வடிவான தாயே உனை
கண்டு மகிழ்ந்தேன் சேயே எனக்கு பைத்தியம்
அதனாலே
எனக்கு மருளது வந்திடவே அம்மா
அருளது தந்திடவே உலக மக்கள்

எங்கும் புகழந்திடவே நீ வருவாயே
நான் கண்டேன் காட்சி என்று பல
தொண்டர் கொண்டாட இன்றுநீ
வந்தால் மிகவே நன்று எனக்கு தருவாயே
இந்த பிறவிதனிலே உனக்கு
தொண்டு புரிவேன் முன்னிலை எனக்கு
அண்ட நிழலை நீயே எங்கள் சிவகாமி
தும்பி முகனை ஈன்ற எங்கள்
அம்பிகையான தாயே உனை
நம்பினேன் காப்பாயே எங்கள் துர்க்காதேவி. 32

# திருப்புகழ்

தத்த தந்த தந்த தன தன
தத்த தந்த தந்த தன தன
தத்த தந்த தந்த தன தன தன தானன
ஆலவிஷம் அள்ளி உண்ட
நீலகண்டன் இடபாகம் பெற்ற
வேலனுக்கு வேல் கொடுத்த எங்கள் வீரதுர்க்கை
காலமெல்லாம் உனை துதித்தேன் அம்மா
காடு மலை ஏறி வந்தேன்
கரங்கூப்பி சிரம்குணிந்தேன் அம்மா உனை சுற்றியே
கடைக்கண்ணால் பார்ப்பது எப்போ நான்
கடைத்தேறி போவதெப்போ
கருணைதரும் நேரம் எப்போ நீ சொல்லுமம்மா
மௌனமாய் நீ இருக்க
மாதாவே உனக்கழகோ நீ சொல்லுமம்மா

கதிர் வளர நீர் வேண்டும்
கதிரவன் துணை வேண்டுமம்மா
கவிபாட உன் அருள் வேண்டுமம்மா நீ தாருமம்மா
சர்க்கரைப் பந்தலிலே
சரமாரி தேன்மழை போல்
வர உருவாகி விட்டு என்னை பாருமம்மா. 33

## திருப்புகழ்

தனன தந்த தனதான
தனன தந்த தனதான
தனன தந்த தனதான தனதான
தேப்பேட்டை மலையதடா
தேவி துர்க்கை யமர்ந்ததடா
தேன்மாரி பொழியுதடா அந்த மலைதனிலே
பௌர்ணமி நாளையடா
பக்தர் கூடும் வேளையடா
பால் அபிஷேகம் நடக்குதடா அம்மன் சிலைதனக்கு
சிவசங்கரன் தேவியடா
ஸ்ரீரதன் தங்கையடா
சிங்க வாகன ரூபியடா எங்கள் மகமாயி
தொண்டர்களை காத்திடவா
துண்டர்களை அழித்திடவா
கண்டவர்க்கு தெரியுமடா எங்கள் கௌமாரி
இந்த பிறவியடா எடுத்தது போதுமடா
என்ன பலன் கண்டோமடா இந்த புவிமீது
ஆசை வலையில் சிக்கிடடா

மோசம் செய்ய நினைக்காதடா
பாசவலையில் வழுக்குதடா இந்த புவிமீது
ஓம் எனும் சக்தியடா
உள்ளத்தில் துதிப்போமடா
உருவம் பலவாகி வந்த எங்கள் சிவகாமி
குமரனைப்போல் நினைத்திடம்மா
குறவன் மாமியம்மா
கொடுக்க வரம் வந்திடம்மா எங்கள் துர்க்கா தேவி. 34

## எந்தநாளும் துர்க்கா வா

ஆதியானவளே தேப்பேட்டை மலையமர்ந்தவளே
ஜோதியானவளே ஆட்சி புரிந்தவளே
கடைக்கண்ணால் என்னைப் பார்த்து காருமம்மா நான்
கரம்கூப்பி சிரங்குணிந்தேன் வாயம்மா நான்
கரம்கூப்பி சிரங்குணிந்தேன் வாயம்மா நான்
கரம் கூப்பி சிரங்குணிந்தேன் வாயம்மா
இந்த பிறவியாய் வந்திடதந்தது நீயம்மா நான்
எந்த நாளும் துர்க்கா என்றென்றும் நீ வாஅம்மா நான்
எந்த நாளும் துர்க்கா என்றென்றும் நீ வா அம்மா
ஐங்கரன் முருகன் அய்யனார் வீரப்பன் தாயம்மா
அனுதினமும் துர்க்கா என்றேன் நீ வாயம்மா நான்
அனுதினமும் துர்க்கா என்றேன் நீ வாயம்மா
பரமேஸ்வரி பார்வதி அந்தரி சுந்தரி நீயம்மா நான்
பகலிரவும் துர்க்கா என்றே நீவா அம்மா நான்
பகலிரவும் துர்க்கா என்றேன் நீ வாயம்மா
காமாட்சி மீனாட்சி காளி நீலி நீயம்மா நான்

கனவிலுமே துர்க்கா என்றேன் நீ வா அம்மா
கனவிலுமே துர்க்கா என்றேன் நீ வா அம்மா
அம்பிகா ரேணுகா மாரி சூலி நீ அம்மா
ஆசையோடு துர்க்கா வென்றேன் நீ வா அம்மா நான்
ஆசையோடு துர்க்கா வென்றேன் நீ வா அம்மா
பூவாத்தா நாவாத்தா பூங்காவனத்தா
பூவாடைகாரியும்நீ யம்மா
பூசை புரிந்து துர்க்க என்றென் நீ வா அம்மா நான்
பூசை புரிந்து துர்க்கா என்றென் நீ வா அம்மா
ஜெக ரட்சகி சிவகாமி செங்கேணி அபிராமி நீயம்மா
ஜெகம் புகழ் துர்க்கா வென்றேன் நீ வாயம்மா நான்
ஜெகம் புகழும் துர்க்கா வென்றேன் நீ வா அம்மா
எல்லை பிடாரி பாதாள பைரவி இன்னும்
எத்தனையோ பெயர் அத்தனையும்
நான் மறந்து மலை ஏறிவந்து துர்க்காவென்றேன் நீ
வாயம்மா
மலை ஏறி வந்தேன் துர்க்காவென்றேன்
நீ வா அம்மா. 35

## சூலம் கரம் பிடித்து

அட என்னம்மா துர்க்கையம்மா ஓம்சக்தி என்றவுடன்
என் நெஞ்சம் சிலுக்குதம்மா நீ சூலம் கரம் பிடித்து
சிங்கமதில் அமர்ந்த காட்சி தேப்பேட்டை மலைதனில்
பக்தி வளருதங்க பல பக்தர்களை இழுக்குதம்மா
அன்பாலே உன்பாடல் பாடி வந்தேன்

ஆசையுடன் சன்னதியை நாடி வந்தேன்
ஆலகால விஷமுண்ட காலனையே உதைத்திட்ட
அறனிட தேவி என்பது நீயம்மா என் ஆவியோடு
கலந்து காருமம்மா (அட)

பூமாலை பொன்மாலை மணிமாலை
பொட்டிடுவார் உந்தனுக்கு நானம்மா
பாமாலை போட்டு உன்னைப் பார்க்குறேன்
பலநாலும் உந்தனையே துதிக்கிறேன் உன்
பாத சேவையை நீ எனக்கு காட்டம்மா
பாலர்களை காத்ததுவும் நீயம்மா (அட)

எத்தனையோ ஆண்டு காலம்
பித்து கொண்டு நான் இருக்க
உத்தமியே உமையவளே
ஊமைபோல் நீ இருக்க இந்த
உலகம் தெரிய வாய்திறந்து பேசம்மா ஒரு
உண்மையான காட்சிதந்து பாரம்மா (அட)

இதை பக்தியோடு கேட்டவர்கள்
பாட்டை வாங்கி படித்தவர்கள்
ஓம்சக்தி என்று சொன்னவர்கள்
தந்தி வந்த அனைவர்களும்
ஆல்போல் தழைக்க வேண்டும் சிவகாமி அவர்
அருகுபோல் வாழ வேண்டும் துர்காதேவி (அட)36

## விருத்தம்

மலைமகளும் கரியமா மலையமர்ந்து
மாந்தர்களை காத்திடவே வந்த தெய்வம்
அலைமகளைபோல் செல்வம் தருமாது
காஞ்சியிலே காமாட்சியாக வந்த தெய்வம்
சிலைவடிவாய் தேப்பேட்டை துர்க்கையம்மன்
சிவன்தேவி பாதமதை போற்றுவோமே 37

## விருத்தம்

அட்சய ஆண்டு தன்னில்
ஆதிவீர துர்க்கையம்மன்
கார்த்திகை பத்தொன்பதாம் தேதி
கருணை உருவான சிலை
5-12-86 அன்று மலையடி துர்க்கையம்மன்
மலர் பாதம் போற்றுவோமே 38

## செய்யுள்

ஐங்கரன் தாயும் நீ சங்கரன் தேவி நீ
ஆதிமால் தன்னுடன் சோதியாய் வந்திடட
அருமை தங்கையும் நீயம்மா
அதிவித மதுரை பாண்டியன் மகளும் நீ
அதிரவே தில்லையில் அரனுடன் ஆடிய
ஆனந்தகாளியம்மா

கரியமாமலை தனில்துருவனை வதைத்திட்ட
கதைதனை எழுதிட
கனவில் வந்திட்ட கருமாரியம்மா
காலங்கள் போகுது நாளும் வீணாகுது
காலனும் வருமுன் காட்சியும் தந்திடு காமாட்சியம்மா
தந்தைதாய் நீயம்மா எந்தனை மறந்திட தகுமோ
உனக்கிமி
தான் வருவதெப்போ தயாபரி மீனாட்சியம்மா
தாங்காத கோபங்கள் தானிருந்த போதிலும்
தாயே மனம் பொருத்து தந்திடுவாய் வரமெனுக்கு
தண்டு மாரியம்மா
ஆசை குழந்தை நான் ஆடியே பாடி பரவசமுடன்
நீ எனக்கு ஞானப்பால் தந்து காத்திடுவாய்
அபிராமியம்மா
அம்மனின் பெயரதுவை அடியவன் சொல்லியே
ஆனந்தமாக
அழகான பேட்டைமலை அமர்ந்து அருள்தரும்
எங்கள் அதிவீர துர்க்கையம்மா. 39

# தாலாட்டு

ஆராரோ அரி ஆராரோ அரி ஆராரோ அரி ஆராரோ
அபிராமியாய் வந்திட்ட துர்க்கையம்மனுக்கு ஆராரோ
காலையும்மாலையும் துர்க்கையம்மனுக்கு
கற்பூரதீபமேற்றுவோம்
கர்த்தன் தேவியாலை நித்தம் துதித்திடுவோம்
அக்குமணி பூண்ட சொக்கநாதன் தேவி அருகே
வந்திடுதாயே
இந்த அடியேனை காத்திட சிங்கமீதிலேறி
அருள்வரம்தந்திடு
பேட்டைமலைதனில் பக்தரை காத்திட பிரியமாய்
வந்திட்ட தாயே
உன்பேறது ஓங்கிட நாரணன் தங்கையேபேரருள்
புரிந்திடுவாயே
இந்தபிறவி நான் எடுத்தது போதும் இனிபிறவி
இல்லா தாயே
எந்தனுக்கு வரம் தந்திட வேணும் இருகரம்
கூப்பினேன் இவ்வேளை வந்திடுவாயே
ஆதிமூலம் மைந்தன் அறியா சிறுவனும் அருங்கவி
பாடிடும் பாலன்
ஆசையாய் ஜெயராமன் நேசமாய் துர்க்கையை
துதித்திடும் சீலன்
(ஆராரோ)
ஓம் துர்க்கா தேவி சரணம். 40

# ஓம் வனதுர்க்கை அம்மன்

# 108 போற்றி

தெற்ப சுனை நீர் தீர்த்தம்
தேவ லோகஅமிர்த கலசம்
தேடி வந்த பக்தருக்கு நல் அம்சம்
தேவி துர்க்கை அருள் கரியமாமலை பொருள்

**சரணம்**

ஓம் துர்கா பரமேஸ்வரி சரணம்
ஓம் அம்பாள் ஜெகத் ரட்சகி சரணம்
ஓம் அருள்பரு தாயே சரணம்
ஓம் ஆதிசக்தி அடியார் பாதம் அடியேன் சரணம்
வன துர்க்கையம்மா
வணங்குகிறேன் உன்னை
வந்திடு தாயே
வந்திடு தாயே
ஓம் துர்க்கா ஓம் துர்க்கா ஓம் துர்க்கா

**ஓம் ஓம் ஓம்**

# ஓம் வன துர்க்கா 108 போற்றி

| | |
|---|---|
| ஓம் துர்க்கா | போற்றி ஓம் |
| ஓம் துணை வருபவளே | போற்றி ஓம் |
| ஓம் கரிய மாமலை வாழ்பவளே | போற்றி ஓம் |
| ஓம் கருணை தருபவளே | போற்றி ஓம் |
| ஓம் நவ துர்க்கை | போற்றி ஓம் |
| ஓம் கருணை தருபவளே | போற்றி ஓம் |
| ஓம் நவ துர்க்கையே | போற்றி ஓம் |
| ஓம் நலம் தருபவளே | போற்றி ஓம் |
| ஓம் கனக துர்க்கையே | போற்றி ஓம் |
| ஓம் கருத்தில் இருப்பவளே | போற்றி ஓம் |
| ஓம் வன துர்க்கையே | போற்றி ஓம் |
| ஓம் வருத்தம் தீர்ப்பவளே | போற்றி ஓம் |
| ஓம் முக்கண்ணன் தேவியே | போற்றி ஓம் |
| ஓம் மூலப்பொருளே | போற்றி ஓம் |
| ஓம் ஐங்கரன் தாயே | போற்றி ஓம் |
| ஓம் அடியாரை காப்பவளே | போற்றி ஓம் |
| ஓம் உலகெல்லாம் படைத்தவளே | போற்றி ஓம் |
| ஓம் ஒங்கார பொருளே | போற்றி ஓம் |
| ஓம் ஆன்மை தருபவளே | போற்றி ஓம் |
| ஓம் அச்சுதன் தங்கையே | போற்றி ஓம் |
| ஓம் கரிமுகன் தாயே | போற்றி ஓம் |

ஓம் குருகனவில் வந்தவளே போற்றி ஓம்

ஓம் குறைஎல்லாம் தீர்ப்பவளே போற்றி ஓம்

ஓம் குழந்தை வரம் கொடுப்பவளே போற்றி ஓம்

ஓம் மஞ்சள் நிறைந்த மலை வாழ்பவளேபோற்றி

ஓம் மாங்கல்யம் வாழ்வு தருபவளே போற்றி ஓம்

ஓம் அகந்தையை அழிப்பவளே போற்றி ஓம்

ஓம் அடியாரை காப்பவளே போற்றி ஓம்

ஓம் சிந்தையோடு வாழ்பவளே போற்றி ஓம்

ஓம் ஜெகம் புகழும் தாயே போற்றி ஓம்

ஓம் தெர்ப்ப சுனை குளிப்பவளே போற்றி ஓம்

ஓம் திருஞான தாயே போற்றி ஓம்

ஓம் மங்கல நாயகியே போற்றி ஓம்

ஓம் மலைவாழும் தாயே போற்றி ஓம்

ஓம் மூவரை படைத்தாய் போற்றி ஓம்

ஓம் தேவரை காத்தாய் போற்றி ஓம்

ஓம் ஆன்மீக பொருளே போற்றி ஓம்

ஓம் அறிவின் ஒளியே போற்றி ஓம்

ஓம் பருவதன் மகளே போற்றி ஓம்

ஓம் பால் கொடுத்தாயே போற்றி ஓம்

ஓம் பயங்கர உருவே போற்றி ஓம்

ஓம் பாலன் முன் வருவாய் போற்றி ஓம்

ஓம் ஏக நாயகியே போற்றி ஓம்

ஓம் எழில் மிகுந்தாயே போற்றி ஓம்

ஓம் கலை தருபவளே போற்றி ஓம்

ஓம் கரிமுகனை படைத்தாய் போற்றி ஓம்

ஓம் மகிடனை வதைத்தாய் போற்றி ஓம்

ஓம் மகிஷ வர்தனையே போற்றி ஓம்
ஓம் கந்தனின் தாயே போற்றி ஓம்
ஓம் கர்ப்பக பொருளே போற்றி ஓம்
ஓம் என்ற ஒலியே போற்றி ஓம்
ஓம் உத்தம தாயே போற்றி ஓம்
ஓம் ஊழ்வினை அறுப்பவனே போற்றி ஓம்
ஓம் உண்மை தருபவனே போற்றி ஓம்
ஓம் எங்கும் நிறைந்தவளே போற்றி ஓம்
ஓம் என் உள்ளத்தில் இருப்பவளே போற்றி ஓம்
ஓம் நல்லவர்க்கு அருள் தருவாய் போற்றி ஓம்
ஓம் நாரணி தாயே போற்றி ஓம்
ஓம் துறவியை காப்பாய் போற்றி ஓம்
ஓம் துணையது இருப்பாய் போற்றி ஓம்
ஓம் பாரத தாயே போற்றி ஓம்
ஓம் பாட அருள்தருவாய் போற்றி ஓம்
ஓம் எந்திர திரவே போற்றி ஓம்
ஓம் எதையும் முடிப்பாய் போற்றி ஓம்
ஓம் நல்லவருக்கு அருள் தருவாய் போற்றி ஓம்
ஓம் நலம்தரும் தாயே போற்றி ஓம்
ஓம் பாசத்தை அருப்பாய் போற்றி ஓம்
ஓம் பாவ பிணி ஒழிப்பாய் போற்றி ஓம்
ஓம் வேதாந்த வித்தகியே போற்றி ஓம்
ஓம் வேல்விக்கு உகந்தவளே போற்றி ஓம்
ஓம் ஓம் உள்ளிருந்து காப்பாய் போற்றி ஓம்
ஓம் செல்வம் தருவாய் போற்றி ஓம்
ஓம் ஜெகத்ரட்ச தாயே போற்றி ஓம்

ஓம் கல்வியை தருவாய் போற்றி ஓம்
ஓம் கனவில் வருவாய் போற்றி ஓம்
ஓம் சிந்தையில் இருப்பாய் போற்றி ஓம்
ஓம் சிறுவன் சினம் அடக்குவாய் போற்றி ஓம்
ஓம் அன்பினை வளர்ப்பாய் போற்றி ஓம்
ஓம் அடியாரை காப்பாய் போற்றி ஓம்
ஓம் ஊக்கம் தருவாய் போற்றி ஓம்
ஓம் உமையவள் தாயே போற்றி ஓம்
ஓம் சக்தியே வருவாய் போற்றி ஓம்
ஓம் சன்மார்க்க தாயே போற்றி ஓம்
ஓம் சுந்தரி வருவாய் போற்றி ஓம்
ஓம் சுகமது தருவாய் போற்றி ஓம்
ஓம் பிறப்பை அறுப்பாய் போற்றி ஓம்
ஓம் பிணியதை தடுப்பாய் போற்றி ஓம்
ஓம் காலனை பகைத்தாய் போற்றி ஓம்
ஓம் காக்க நீ வருவாய் போற்றி ஓம்
ஓம் கண்ணொளி தருவாய் போற்றி ஓம்
ஓம் கருத்தினில் இருப்பாய் போற்றி ஓம்
ஓம் திரிபுர சுந்தரியே போற்றி ஓம்
ஓம் தில்லை வாழ் காளியே போற்றி ஓம்
ஓம் காஞ்சி காமாட்சியே போற்றி ஓம்
ஓம் மதுரை மீனாட்சியே போற்றி ஓம்
ஓம் கருமாரி தாயே போற்றி ஓம்
ஓம் கவலை தீர்ப்பவளே போற்றி ஓம்
ஓம் கருவில் பிறக்காத தாயே போற்றி ஓம்
ஓம் மந்திர தாயே போற்றி ஓம்
ஓம் மணி விளக்கே போற்றி ஓம்

ஓம் திரிபுரத்தாளே போற்றி ஓம்

ஓம் திங்களை அணிந்த சிவன் தேவியே போற்றி ஓம்

ஓம் வேம்பினை ஆள்வாய் போற்றி ஓம்

ஓம் வினை எல்லாம் தீர்ப்பாய் போற்றி ஓம்

ஓம் தேப்பேட்டை மலை வாழ்பவளே போற்றி ஓம்

ஓம் தேடிவரும் பக்தர்களை காப்பவளே போற்றி ஓம்

ஓம் வனதுர்க்கை தாயே போற்றி ஓம்

ஓம் வரும் அடியாரை காப்பவளே போற்றி ஓம்

ஓம் வருவாய் வருவாய் சிங்கார வாகன தாயே போற்றி ஓம்

ஓம் ஓம் ஓம்.

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி


| பாடல் | | பாடல் எண் |
|---|---|---|
| அட்சய ஆண்டு | ... | 38 |
| அட என்னம்மா | ... | 36 |
| அடிவார கணபதி | ... | 17 |
| அம்மன் புகழ் | ... | 20 |
| ஆதிமுதல் | ... | 1 |
| ஆதியானவளே | ... | 35 |
| ஆராரோ ஆரிரரோ | ... | 40 |
| ஆனந்தம் | ... | 13 |
| இருக்குதா இல்லையா | ... | 27 |
| எங்கும் நிறைந்த | ... | 28 |
| எந்தன் தாய் | ... | 15 |
| என் பைத்தியம் | ... | 22 |
| ஐங்கரன் தாயும் | ... | 39 |
| ஓம் எனும் | ... | 7 |
| ஓம் கற்பூர | ... | 26 |
| ஓம் வனதுர்க்கா | ... | 24 |
| ஓம் விநாயகா | ... | 2 |
| கலியுக கடவுளது | ... | 12 |

| பாடல் | | பாடல் எண் |
|---|---|---|
| கனக துர்க்கை | ... | 3 |
| கனகதேவி | ... | 8 |
| கேளம்மா எங்கள் | ... | 23 |
| சக்தியின் புகழ் | ... | 29 |
| தத்த தந்த | ... | 33 |
| தந்த தனத்த | ... | 32 |
| தந்தன தனத்த | ... | 31 |
| தந்தையும் எனக்கில்லை | ... | 19 |
| தனன தந்த | ... | 34 |
| தான தான | ... | 30 |
| திங்களணி பொங்கரவம் | ... | 21 |
| தேப்பேட்டை அமர்ந்தவனே | ... | 16 |
| தேப்பேட்டை கரியமாமலை | ... | 9 |
| தேப்பேட்டை பத்தினி | ... | 25 |
| தேவி துர்க்கா | ... | 14 |
| மஞ்சளாடை கட்டிக்கிட்டு | ... | 18 |
| மலைமகள் | ... | 37 |
| மார்கழி பருவத்திலே | ... | 10 |
| முந்தி முதல | ... | 4 |
| மைந்தரில்லா | ... | 11 |
| வணக்கம் | ... | 5 |
| வனதுர்க்கா | ... | 6 |